**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 165/2019.**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வெங்கடேசன். | ஜாதி | |
| தந்தை பெயர் | மாணிக்கம். | தொழில் | உதவி வருவாய் அலுவலர். |
| கிராமம் | ரத்தினம் நகர். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 47/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அ.சா.4 மனுவின்பேரில் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் தேனி, அல்லிநகரம் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில், நகராட்சிக்கு வரும் தபால்கள், மனுக்கள் மற்றும் விண்ணப்பங்கள் எங்களது அலுவலகத்தில் பராமரித்து வரும் தன்பதிவேட்டில் (P.R. Register) –இல் நாள் வரிசைக்கிரமப்படி தொடர் வரிசை எண்ணுடன் பதியப்படும் என்றால், சரிதான். நான் நீதிமன்ற முதல்விசாரணையில் சொல்லியுள்ள வார்டு எண். 21 A.R.R. நகர், வரி விரிப்பு எண். 11813 என்பதற்கு சொத்து வரி பெயர் மாற்றம் குறித்து, வரப்பெற்ற விண்ணப்பமானது நகராட்சியின் தன்பதிவேட்டில் பதிவாகியுள்ளது என்றால், சரிதான். அது எந்த தேதி மற்றும் தொடர் வரிசை எண்ணில் பதிவாகியுள்ளது என்றால், அது அலுவலகப் பதிவேடுகளில் உள்ளது, அதைப் பார்த்தால் சொல்லமுடியும். நான், தேனி, நகராட்சி அலுவலகத்தில் பணிசெய்தபோது, மேற்படி தன்பதிவேட்டை பராமரித்து வரும் பொறுப்பிலிருந்தேனா? என்றால், நான் இல்லை. மேற்படி தன்பதிவேட்டை யார் பராமரித்து வந்தது என்றால், அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி விண்ணப்பமானது தேனி, நகராட்சி ஆணையரிடம் நேரடியாகக் கொடுக்கப்பட்டதா? அல்லது கடிதம் மூலம் அனுப்பப்பட்டதா? அல்லது நகராட்சியின் மனுப் பெட்டியல் போடப்பட்டதா? என்றால், நகராட்சியின் மனுப் பெட்டியில் போடப்பட்டது ஆகும். மனுப் பெட்டியில் விண்ணப்பதாரர்கள் போட வேண்டுமா? அல்லது யார் வேண்டுமானாலும் போடலாமா? என்றால், யார் வேண்டுமானாலும் போடலாம். மேற்படி மனுவை மனுப்

பெட்டியல் போட்டது யார் என்று எனக்கு நேரடியாகத் தெரியுமா? என்றால், எனக்குத் தெரியாது. தன்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் யாரால், யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால், மேற்படி விண்ணப்பத்தை எடுத்த கிளார்க்கானவர் தன்பதிவேட்டில் பதிவு செய்தபின்னர், சொத்து வரி விண்ணப்பப் பதிவேட்டில் பதிவு செய்து, வருவாய் பிரிவிற்கு அனுப்பிவைப்பார்கள். மேற்படி விண்ணப்பம் சமர்ப்பித்த காலத்தில் தேனி, நகராட்சி வருவாய் பிரிவில் பொறுப்பிலிருந்த நபர் யார் என்றால், எனக்கு அதுபற்றித் தெரியாது. மேற்படி விண்ணப்பத்தை யார் என்ன நடவடிக்கை செய்தார்கள் என்றால், வருவாய் உதவியாளர் நேரடி களஆய்வு செய்து, குறிப்பு கொடுப்பார். மேற்படி விண்ணப்பத்தை தேனி, நகராட்சியில் நடவடிக்கை எடுத்த வருவாய் உதவியாளர் யார் என்றால், தெரியாது. பொதுவாக, மனுக் கொடுக்கப்பட்டால் அதற்கென மனு எண் கொடுக்கப்பட்டு, கோப்பு பராமரிக்கப்படும் என்றால், சரிதான். மேற்படி மனுவிற்கும் மனு எண் கொடுக்கப்பட்டு, கோப்பு பராமரிக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி விண்ணப்பத்திற்கான மனு எண் மற்றும் கோப்பு எண் தெரியுமா? என்றால், தெரியாது. மேற்படி மனுவின்பேரில் களஆய்வு செய்த, வருவாய் உதவியாளர் அவர்களின் அறிக்கை அந்த கோப்பில் உள்ளது என்றால், சரிதான். வருவாய் உதவியாளருடன் கள ஆய்விற்கு வேறு நபர்கள் செல்வார்களா? என்றால் வருவாய் ஆய்வாளர் செல்வார். மேற்படி மனுவின்பேரில், கள ஆய்விற்குச் சென்ற வருவாய் ஆய்வார் யார் எனத் தெரியுமா? என்றால், தெரியாது. மேற்படி வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மனுவின்பேரில் கள ஆய்வு செய்து கொடுத்த குறிப்பு என்ன என்று என்னால் சொல்லமுடியுமா? என்றால், அவர்கள் கள ஆய்விற்கு சென்ற சமயத்தில் நான் அலுவலகப் பொறுப்பில் இல்லை, பின்னர் நான் பொறுப்பேற்றபின்னர் தெரிந்துகொண்டேன். வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மனுவின்பேரில் கள ஆய்வு செய்து கொடுத்த குறிப்பின்பேரில், மனுதாரருக்கு நகராட்சியிலிருந்து ஏதேனும் தகவல் அனுப்பபட்டிருந்ததா? என்றால், மனுதாரருக்கு தகவல் அனுப்பப்படவில்லை. ஆட்சேபனைதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டது. நான் பொறுப்பிலிருந்த சமயத்தில், மனுதாரரை நேரில் பார்த்தேனா? என்றால், இல்லை. மேற்படி கோப்பில் எனக்கு முன்பிருந்த அலுவலர்கள், மனுதாரரை நேரில் பார்த்ததாக குறிப்பு இருந்ததா? என்றால், இல்லை. நான் நீதிமன்ற முதல்

விசாரணையில், விண்ணப்பதாரர் அவரது மனைவி கடந்த 2012 ம் ஆண்டில் எழுதிக் கொடுத்ததுபோல் ஒரு அபிடவிட் நகல் தாக்கல் செய்தார் எனக் கூறியுள்ள நிலையில், மேற்படி நகலை விண்ணப்பதாரர் என்னிடம் நேரடியாகக் கொடுத்தாரா? என்றால், இல்லை. மேற்படி அவிடவிட்டின் நகல் யாரிடம், யாரால் கொடுக்கப்பட்டது என்று தெரியுமா? என்றால், தெரியாது. மேற்படி கோப்பில் அந்த அபிடவிட் நகல் யாரால், யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற குறிப்புள்ளதா? என்றால், இல்லை. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு ஆவணங்களின் உண்மை நகல்களை சமர்ப்பிக்கச் சொல்லி, விண்ணப்பதாரர் ராமச்சந்திரன் என்பவரிடன் நான் கூறவில்லை. யார், ராமச்சந்திரனை ஆவணங்களின் உண்மை நகல்களை சமர்ப்பிக்கச் சொன்னார் என்ற குறிப்பு கோப்பில் உள்ளதா? என்றால், இல்லை. ராமச்சந்திரனை ஆவணங்களின் உண்மை நகல்களை சமர்ப்பிக்கச் சொல்லி, எழுத்து மூலமாக நகராட்சியிலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டதாக அந்த கோப்பில் குறிப்பு உள்ளதா? என்றால், இல்லை. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல், அபிடவிட் நகலில் புகைப்படம் இல்லாததால் புகைப்படம் ஒட்டிக் கொண்டுவரும்படி கூறினோம் என்று சொல்லியிருப்பதில், நான் அவ்வாறு யாரிடமும் கூறினேனா? என்றால், நான் கூறவில்லை. யார் அவ்வாறு கூறினார்கள் என கோப்பில் குறிப்புள்ளதா? என்றால், இல்லை. எங்களது அலுவலகத்திலிருந்து மனுதாரருக்கு அபிடவிட் நகலில் போட்டோ ஒட்டிக் கொண்டுவருமாறு எழுத்துமூலமான அறிவிப்பு அனுப்பியதாக கோப்பில் குறிப்பு இல்லை என்றால், சரிதான். நான் நீதிமன்ற முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு, கடந்த 2013 இல் மீண்டும் புகைப்படம் ஒட்டி தாக்கல் செய்துள்ளார் எனக் கூறியுள்ள நிலையில் யார் என்னிடம் தாக்கல் செய்தார்கள் என்றால், யாரும் என்னிடம் தாக்கல் செய்யவில்லை. அபிடவிட் நகலில் போட்டோ ஒட்டி யார் தாக்கல் செய்தார் என்ற குறிப்பு இல்லை என்றால், சரிதான். மேற்படி அபிடவிட்டில் யாரிடம் கொடுத்து, யாரால் வாங்கி வைக்கப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால், சரிதான். மேற்படி கோப்பில், விண்ணப்பதாரரின் மனைவி நகராட்சி ஆணையளருக்கு போன் செய்ததாகக் குறிப்பு உள்ளதா? என்றால், குறிப்பு இல்லை. மேற்படி விவரத்தை கோப்பில் யார் ஏற்றியது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. அந்தக் குறிப்பின்பேரில்,

வரிவிதிப்புதாரருக்கு நகராட்சி அலுவலகத்திலிருந்து எழுத்து மூலமாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா? என்றால், அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு அனுப்புவதற்கு முன்னர், வரிவிதிப்புதாரர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினாரா? அல்லது நகராட்சியிலிருந்து அறிவிப்பு அனுப்பியபின்பு, வரிவிதிப்புதாரர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினாரா? என்றால், அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அபிவிட் நகல் மற்றும் போட்டோ ஒட்டிய அபிடவிட் ஆகியவற்றை நான் நகராட்சி அலுவலகத்தில் பணியிலிருந்தபோதே கோப்பில் இருந்ததைத் தவிர்த்து, அதன்பின்னர் இன்று நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் வரை எப்போதாவது பார்த்திருக்கிறேனா? என்றால், பார்க்கவில்லை. எங்களுடைய அலுவலகக் கோப்பில், நான் நீதிமன்ற விசாரணையில் கூறியுள்ளதுபோல், தேனி, நகராட்சி அலுவலகக் கோப்பில் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. நான், காவல் துறையினர் சொல்லிக் கொடுத்தன்பேரில், எனக்கு நேரடியாகத் தெரியாத விசயங்களை நான் நேரில் அறிந்ததுபோல், நீதிமன்ற முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால், சரியல்ல, போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், நிராகரிக்கப்படவேண்டியது என்றும் சொன்னால், சரியல்ல. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தபோது, அலுவலகக் கோப்பைப் பார்த்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால், சரிதான்.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.17 18:07:42 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
தேனி.